**அக்டோபர்: 02**

**நான் (இயேசு) கற்பிக்கிற யாவையும் செய்தால் நீ சிநேகிதனாயிருப்பாய்.**

**வாசிக்க: யோவான் 15:9-17**

பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன், என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.






செல்லகுட்டிங்களா, நட்பு, நண்பன் (அ) தோழி பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க..? நட்பு இருந்தால் அங்கே அன்பு, சிநேகம், மன்னிப்பு இருக்கும். கோபம், சண்டை இருந்தாலும் வெறுப்பும், தள்ளிவிடுதலும் இருக்காது. நம் ஆண்டவராகிய இயேசு தம் சீஷரையும், அவர்கள் வார்த்தைகளை விசுவாசித்து அவரை ஏற்று கொள்ளுபவர்களையும் பார்த்து தம் சிநேகிதன் என அழைக்கிறார். நம்மை நாம் இருக்கிற நிலைமையில் அப்படியே நேசித்து ஏற்றுக்கொண்டு, பின்னர் அவர் சுபாவங்களை கற்றுதந்து அவரை போல மாற்றுகிறார். அப்படி மாற்றியபின் அவர் நம்மிடம் எதிர்பார்க்கிற சுபாவத்தை தான் மேலே சொல்லி இருக்கிறார். அதாவது நாமும் அவரை போலவே நம் சுற்றுமுள்ளவர்களை நேசிக்கவும் ஏற்று கொள்ளவும் வேண்டுமென நினைக்கிறார். அவ்வளவு பரிசுத்தமான சர்வவல்லமையுள்ள தேவன், தகுதியில்லாத நம்மை நண்பனாக ஏற்று, நேசிக்கிறபோது நாம் நம்மை போலவே உள்ள சக மனிதர்களை ஏற்று கொள்ள தயங்கலாமா...? நிறைய பேர் சொந்த வீட்டிலேயே அக்கா, அண்ணன், தம்பி தங்கை என்ற உறவுகளையே ஏற்று கொள்வதில்லை. இந்த அன்பு, சிநேகம் முதலில் நம் வீட்டில், பின் திருச்சபையில், அதன் பின் சமுதாயத்தில் காண்பிக்க நாம் கடமை மட்டுமெல்ல கடனும் பட்டிருக்கிறோம். ஏனெனில் நம்மை அப்படி இயேசப்பா ஏற்றுகொண்டாரே. இது நமக்கு கடினம் என அறிந்தே அவர் தம் அன்பை பரிசுத்த ஆவியானவரை கொண்டு நம் இருதயத்தில் ஊற்றுகிறார். அதற்காக ஜெபிக்கலாமா. .?

மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. ரோமர் 5:5

**ஜெபம்**

அன்பின் பரலோக பிதாவே, உங்க அன்பினால் என்னை பிள்ளையாக ஏற்று பின் உம் சிநேகிதனாக பார்க்கிறீரே. நானும் உங்க அன்பை மற்றவர்களுக்கு காண்பித்து, உம்மைபோல மாற உங்க அன்பை என் இருதயத்தில் ஊற்றும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

